கருப்புக்கொடி நாள்: பெருமித வெற்றி!

திராவிடநாடு

மலர் 9 | 28—1—51 | இதழ் 32

இலங்கை 15 சதம்] [விலை அணா 2

டில்லி மந்திரி மஹ்தாப் திகைப்பு

ஆளவந்தார் தர்பார் பலிக்கவில்லை

336 வீரர்கள்மீது அடக்குமுறை

மாணவர் பணி: மக்கள் ஆர்வம்

டில்லி மந்திரி மஹ்தாப் கடந்த 7ந் தேதி முதல் தமிழ் நாடெங்கும் கருப்புக் கொடிகளைக் கண்டு திகைத்திருக்கிறார்! சென்னை — கோவை—திருச்சி — மதுரை முதலிய நகரங்களில் ஆயிரக் கணக்கான கொடிகள் திராவிடத்தின் அதிருப்தியை எடுத்துக் காட்டியிருக்கின்றன.

தடியடி! சிறை! மிரட்டல்! வழக்கு!—முதலாய ஆளவந்தாரின் தர்பார், குறையவில்லை. பல மடங்கு அதிகமாகவே நடைபெற்றிருக்கிறது.

ஒடிந்த கால்கள், நொறுங்கிய நரம்புகள், சிந்திய இரத்தம்—கொஞ்சமல்ல

வந்தவர் டில்லி மந்திரி! அவரை வரவேற்றது மக்களல்ல; போலீஸ் படை!!

கோவையில் போலீஸ் கெடுபிடி இல்லை. எனவே, கருப்புக் கொடி நாள் மிகவும் அமைதியாக நடைபெற்றிருக்கிறது.

ஆனால் 'கோவைப் பாதை'யை, எங்கும் கடைட்பிடிக்கவில்லை காங்கிரஸ் சர்க்கார்!

கோவையில்—கெடுபிடி இல்லை!

திருச்சியில்—தடியடி, கைது!

சென்னையில்—மூர்க்கத் தாண்டவம்!

திண்டுக்கல்லில்—கைது!

மதுரையில்—நூற்றுக் கணக்கில் கைது! வழக்கு! சிறைவாசம்!

குளித்தலையில், கருப்புக்கொடி காட்டிய மறுநாள் பலர் மீது வழக்கு.

இதுபோல, விசித்திர விளையாட்டுகளை நடத்தியிருக்கிறது காங்கிரஸ் ஆட்சி.

அடக்குமுறையோ பேருருவில் கொக்கரித்திருக்கிறது. ஆயினும், அஞ்சவில்லை நமது வீரர்கள்!

ஆங்காங்கே, அமைதி குறையாத முறையில் கருப்புக் கொடி பிடித்து கழக முடிவை, வெற்றியாக்கியிருக்கின்றனர்.

ஆளவந்தாரின் அடக்குமுறைகளை, அலட்சியத்தால் ஒதுக்கிவிட்டு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்டநினைக்கும் சிறைச்சாலை என்று சிந்து பாடிய வண்ணமே சென்றிருக்கின்றனர்.

இந்தக் காட்சி—நமது வெற்றியின் மாட்சி. இதை எண்ணும்போது எவர் இதயமும் பூரிக்கவே செய்யும்!

அடக்குமுறைக்கு ஆளான தோழர்களைப் பாராட்டுகிறோம். வாழ்க, அவர்கள் என்று வாழ்த்துகிறோம்!

கருப்புக் கொடி நாளை வெற்றிகரமாக்குவதில் ஆங்காங்குள்ள திராவிட மாணவர்கள், முக்கிய பங்கேற்றனர் என்றசெய்தி நம்மைக் களிப்பிலாழ்த்துகிறது. குறிப்பாக கோவை—திருச்சி—மதுரை, மாணவர்கள் செய்த சேவை—மகத்தானது.

திருச்சியில், மஹ்தாபிடம் கையெழுத்து வாங்குவதுபோல மாணவர் சென்றனராம்

டில்லி மந்திரியிடம் கையெழுத்து வாங்கும் நோட்டை நீட்டிவிட்டு, ஒரு கவரையும் தந்தனராம்.

கவரை, ஆவலோடு அவர் பிரிக்க—அதில் கருப்புத் தாளும் (Go Back) என்ற எழுத்துகளும இருக்கக் கண்டு, அவர் மிரண்ட காட்சியும் வெகு ரசமாக இருந்ததாம்! இது போல் நூற்றுக்கணக்கான கவர்கள் அவர் வசம் குவிந்தனவாம்!

மதுரையில் மஹ்தாப்பேசவிருந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் 'மக்கள்' இல்லையாம்!

திண்டுக்கல் வழியாக, திருச்சியிலிருந்து மதுரை செல்லவிருந்த மஹ்தாப் கடைசிநேரத்தில் அந்த வழியே செல்லாமல் வேறு வழியில் சென்றாராம்!

கருப்புக் கொடி நாள், ஆங்காங்கும் நடைபெற்றிருக்கிறது—தமிழ் நாடெங்கும், டில்லி மந்திரி சென்றவிடமெங்கும்.

பொறுப்புணர்ச்சியோடு தி. மு. க. வின் செயல்திட்டத்தை, அமைதியோடு நிறைவேற்றித் தந்த பொது மக்களுக்கு நமது நெஞ்சுகந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எதுவரினும் தயங்கோம் என்று இலட்சியங் காத்த நமது செயல் வீரர்களை மீண்டும் வாழ்த்துகிறோம்.

டில்லி மந்திரி மஹ்தாப் வருகையால் ஆளவந்தார் அடக்குமுறைக்கு ஆளானோர் பட்டியல்:—

சென்னை:

காஞ்சி. மணிமொழியார்
கே. கோவிந்தசாமி
சி. பஞ்சாட்சரம்
என். ஜீவரத்தினம். எம். சி
வி. முனுசாமி. எம். சி
சி. வி. ராஜன்
ஆர். அங்கமுத்து
மறைமலை
கே. பார்த்தசாரதி
பி. ராமச்சந்திரன்

(6-ம் பக்கம் பார்க்க)

நெசவாளி போர் பாரீர்! அவர் வெற்றி காணீர்!

ஆடை தந்து வந்தனர் அவர்கள்—தினம் 'பாடை' சுமந்திடும் நிலை தான் இன்று, அவர்களுக்கு!

நெசவாளர்கள் நிலை நினைத்தாலே நெஞ்சு வெடித்திடும் போலாகிவிட்டது!

ஓடும் தறிகளிடையே பாடிமகிழ்ந்த அவர்கள், தறிக் குழிகளில் உட்கார்ந்தபடியே, கண்ணீர் வடித்திடுகின்றனர்.

நெசவு, அவர்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்துவரும் தொழில்— அதிலேயே தங்கள் உழைப்பு, நேரம், சிந்தனையெல்லாம் ஊறவிட்டவர்கள்! வேறு தொழில்களேதும் செய்யும் திறம் இல்லாதே போயிற்று, அவர்களுக்கு!

இன்றோ, நெசவுத் தொழில் செய்யமுடியவில்லை — ஏன்? போதுமான நூல் தரவில்லை. நூலின்றிதறி எப்படி இயங்கும்? தறி அசையாமல் பொருள் ஏது? ஆகவே, வறுமை மிகப் பயங்கரமாகப் படையெடுத்து விட்டது.

இலட்சக் கணக்கிலே உள்ள, நெசவுத் தொழிலாளித் தோழர்கள் உழைக்க மனமிருந்தும், உழைக்க முடியவில்லை. நூல் இல்லை. ஆகவே வேலை இல்லை—வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது!

அருப்புக்கோட்டையில், பட்டினி, வில்லிபுத்தூரிலே பட்டினிச்சாவு, காஞ்சியிலே பட்டினி ஊர்வலம்..... இபபடி நிலைமை இறங்கிக்கொண்டே வந்தது!

நெஞ்சு வெடிக்கும் சம்பவங்கள் பல நமசெவி வந்துசேர்ந்தபொழுது திடுக்கிட்டோம் — தினறினோம்— கண்ணீர் சிந்தினோம்! பட்டினியினால் குடும்பம் குடும்பமாக மடிந்திடும் கோரக்காட்சி இந்தப் புண்ணிய பாரத்திலே, 'பூலோக கடவுளர்கள்' ஆட்சியிலேதான் பார்க்க முடிந்தது. அப்பன் சாக, அந்தத் துயரத்தாலும், ஏற்கனவே அரை உயிரான தாய் மறுநாள் சாக, மகன் கதறுகிறான் — அவர்களைச் சுமந்து சுடுகாட்டுக்குப் போகக்கூட முடியவில்லையே என்று!

ஆடை கொடுத்திட்ட குடும்பம் அது—அதில் பாடை கட்டிடக்கூட ஆள் இல்லை!

சாவை, எத்தனைநாள் சகித்துக் கொண்டிருக்கமுடியும்? சாவென்ன சாதாரணமானதா, கோரச்சாவுகள் தினந்தினம் — மனித உயிர்தான் அவ்வளவு இலேசானதா, மடியட்டும் என்று விட்டுவிட! ஆகவே, நெசவுத்தொழிலாளித் தோழர்கள் இந்தச 'சாவுக் கதைகளுக்கு' ஒரு முடிவுரை எழுத முற்பட்டனர்.

ஊர்வலம் சென்றனர். ஊரான் வேருக்குத் தீர்மானமாகத் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லினர்— கூட்டங்கள் போட்டனர்! சட்டசபைகளில் கேள்விகள் கேட்டனர்! குமுறும் வயிற்றின் கொந்தளிப்பு அடங்கவில்லை!

'உங்களை இரட்சிக்கவே, அவதாரம் பண்ணிவந்த புண்ணிய புருடர்கள் நாங்கள்' என்று கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ்ஆட்சியிலேதான் அவர்களுக்கு விடை கிடைக்கவில்லை. ஆகவே, அறப்போர் தொடுக்க தீர்மானித்தனர்.

சேலம், இப்போருக்குத் தலைமை தாங்கிவிட்டது! சேலம் செயலாற்றும் காலம் வந்துவிட்டது—ஆகவே எதற்கும் துணிந்து இறங்கினர் களத்தில், இன்று வெற்றியும் பெற்றனர்.

சேலம், நெசவாளத் தோழர்கள் நிறைந்துள்ள பெருநகரம் — அது, நெசவுத் தொழிலுலகத்தின் தலைநகரேதான்! அங்குள்ள மக்களின் அல்லலை எடுத்தோதினர், பலநாள், பலமுறைகளில்! ஆனால் பலன் இல்லை. எனவே, சென்ற 10—1—51 கலெக்டர் காரியாலயத்தின் முன்பு அறப்போர் தொடுப்போம் என்று அறிவித்தனர்.

அன்று, 'போரும்' மிகஒழுங்கான முறையிலே நடந்தது. எல்லாத் தொழிலாளர்களும் ஒத்துழைத்தனர். கடைகள் எல்லாம் மூடிக்கிடந்தன—சினிமா கொட்டகைகள்கூட 'மௌனம்' சாதித்தன—எங்கும் நெசவுத் தொழிலாளிகளுக்கு ஆதரவு பகிரங்கப்படுத்தப்பட்டது.

காங்கிரசாட்சி அவர்களின் பரிதாப நிலை கண்டு கண்ணீர் சிந்தவில்லை—பட்டினியைப் போக்கவில்லை —நல்தா மார்க்கம் தேடவில்லை— அவர்களை அடக்க 144 தடை புத்தாவை வீசிற்று! வெட்கம், வெட்கம்!

ஆனால், மாலையிலே, தடையுத்தரவை மீறித் தொழிலாளர் தலைவர்கள் பேசினர். நம் தோழர், நமது தளராத உழைப்பினாலும், குன்றாத மனத் திடத்தாலும் நம் மனதிலே நிலையான இடம் பெற்றனர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிப் பாதையிலே விரைகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

மஹ்தாப் வருகை:

தியாகப் பட்டியல்:

கைது செய்யப்பட்டோர்:-	236
காவலில் வைக்கப்பட்டோர்:-	48
வழக்கு தொடரப்பட்டோர்:-	12
சிறை தண்டனை பெற்றோர்:-	32
சுவரொட்டி ஒட்டியமைக்காக வழக்கு தொடரப்பட்டோர்:-	8

திராவிட நாடு

ஞாயிறு] 28—1—51 [காஞ்சி

தெரியாதவர்கள்!

--x--

'ஜண் ஜண்' என்று சதங்கை சத்தம் எழுந்தது.

நட்டுவனாரின் 'கனத்த' குரலில் வெடித்த பாட்டும் கேட்டது.

அவள் ஆடினாள் — சுற்றி சுற்றி வந்து ஆடினாள்!

ஆனால் பார்த்திருந்த மக்களிடமிருந்தோ, கூச்சலும், குழப்பமும் எழுந்தது!

"ஓடு, ஓடு, உள்ளே ஓடு" என்று ஒரு குரல்.

"ஆட்டமா அம்மா, ஆடுறே" என்று மற்றொரு கேலிப் பேச்சு.

"இதற்குப் பெயர் நாட்டியமா?" ஒரு மூலையிலிருந்து கோபக் கூச்சல்!

அவள் ஆடினாள்—ஆனால் மக்கள் வெறுத்தனர். அவள் ஆடவில்லை, 'குதித்தாள்' என்று கூறினர் மக்கள்.

ஆனால் அவளுக்குப் பட்டம் ஆடலழகி என்பது! ஆடலழகியின் ஆட்டமோ பார்க்க சகிக்கவில்லை

மக்களின் எதிர்ப்பொலியையும் அலட்சியம் செய்து மேலும் ஆடினாள் — பார்க்க வந்தவர்களின் கோபம் எல்லை மீறிவிட்டது!

அவ்வளவுதான்...

கற்கள் பறந்தன — நாற்காலிகள் நொறுங்கின—பெஞ்சுகள் பஞ்சு பஞ்சாகிவிட்டன — விளக்குகள் பொடிப் பொடியாகிவிட்டன— வர்ண விளக்குகளோ படார் படார் என வெடித்தன!

நட்டுவனார் நழுவினார்—மிருதங்கக்காரர் மிரண்டோடினார் — பின்னணி வாத்திய கோஷ்டி போன இடம் தெரியவில்லை.

ஆடலழகி அன்னம் மட்டும் தனியாகச் சிக்கிக்கொண்டாள்.

"ஆடத் தெரியாத நீ, இப்படி அரங்கத்திற்கு வரலாமா?" என்று கேட்டான் ஒரு ஆத்திரக்காரன்.

"குற்றம் என் மீதில்லை—நான் ஆடிய கூடம் கோணல்" என்றாள் ஆடத் தெரியாதவள்!

எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர்.

x x x

ஆடத் தெரியாவிட்டாலும், அவளுக்குப் பேசத் தெரிந்தது — அனவேதான் கூடம் கோணல் என்று கூசாமல் சொன்னாள், கேட்பவர்கள் சிரிப்பார்களே என்ற எண்ணம் துளியுமின்றி!

அவள் ஆடலழகி—ஆட்டத்தால், அழகால் ஆள் மயக்கிட முடியாவிட்டாலும், சொல்லால் சொக்கவைக்கப் பார்த்தாள்!

ஆனால் நாட்டை ஆளவந்த அழகர்கள் இப்படிப் பேசும்பொழுது நமக்குச் சிரிப்பு வருவதில்லை-சீற்றம் தான் வருகிறது!

அவள் பேசியது கேளிக்கையில்! இவர்கள் 'வாக்கு சாதுர்யம்' விளையாடுவது, பிண வீட்டில்!!

ஆளவந்தார்கள், தங்கள் பழம் பெருமையிலே அதிக அக்கறை காட்டுகிறார்கள். எதற்கெடுத்தாலும் 'ஆகா, நாங்கள் யார் தெரியுமா? அந்நியர்களை விரட்டிய அசகாய சூரர்கள்' என்ற பல்லவியைப் பாடுகிறார்கள்.

பசி! பட்டினி! உணவு நெருக்கடி—கத்தாழையைத்தின்கிறான் மனிதன்! புல்லைத் தின்னுங்கள், புண்ணாக்கை உண்ணுங்கள் என்று 'கனம்கள்' பேசுகிறார்கள்!

'அரிசி' தரமுடியவில்லை — ஆனாலும் ஆத்திரத்தை அதிகம் வளர்க்கிறார்கள்!

பசியை நீக்க 'விரதம்' இருக்கச் சொன்னவர்கள், மனிதனை, விலங்காக யோசனை கூறியவர்கள், இன்னமும் உலவுகிறார்கள், மக்களிடையிலே!

காங்கிரசாட்சியாளர்கள், வந்தார்கள் — மக்களுக்கு முதல் விருந்து 'பசி'—என்று அறிவித்து விட்டனர். உணவு ரேஷனை வரவரக் குறைத்து, இன்று நம் திராவிடத்தைப் பொறுத்த அளவில் 9-அவுன்ஸ் என்று அறிவிக்கப்பட்டு விட்டது!

நம் மந்திரிகள், 'டெல்லி'யைக் கேட்டு வந்த வரம், அதிக உணவு உதவி — அவர்கள் இதோ தந்து விட்டார்கள் 'பேருதவி' 25%, குறைத்து விட்டனர்!

பன்னிரண்டு ஒன்பதாகி விட்டது —எனினும் அவர்கள்தான் ஆட்சியிலே இருக்கிறார்கள்!

நிலைமை இப்படி—ஆனால், அவர்கள் கொட்டும் 'தப்பறை'தான் நம் செவியைக் குடைகிறது—நெஞ்சைத் துளைக்கிறது!

பருவ மழை இல்லை

இயற்கை விபரீதம் புரிந்து விட்டது

விளைவு சரியாக இல்லை

நினைத்தஅளவு கிடைக்கவில்லை

இப்படி ஆளுக்கொரு காரணம் காட்டுகிறார்கள்! இயற்கை விபரீதம் புரியாமலிருந்து, பருவ மழையும் பொழிந்து, விளைவு நிறைந்து, நினைத்த அளவு கிடைத்து விட்டால் இவர்களை யார் கேட்கப் போகிறார்கள்! நெருக்கடி நேரங்களில்தான் 'கனம்களின்' திறமையும், அறிவும் பயன்பட வேண்டுமேயொழிய, சுமுக நிலையில் இந்த 'சூரர்கள்' உதவியை மக்கள் ஏன் நாடப்போகின்றனர்!

இயற்கை விபரீதங்கள், இவர்கள் சொல்லித்தான் மக்கள் அறிந்து கொள்ளவேண்டிய நுணுக்கக்கணக்கல்ல — எல்லோருக்கும் தெரிந்த உண்மை—அதனை ஆட்சியாளர்கள் கூறத் தேவையில்லை — வயலோரத்தில் நிற்கும் வரதனும், வானத்தைப் பார்த்து ஏங்கும் கந்தனும் அறிந்தவை — நாளும் சொல்லும் சோக 'ஒப்பாரி' — இந்த அபலக்குரலை, அவர்களும் எழுப்பினால் அர்த்தமில்லை—அதற்காக அவர்களை நாம் அனுப்பவும் இல்லை!

குழந்தை அழுகிறது —'ஏண்டா அழுகிறாய்?' என்று கேட்டாள் தாய் 'காலிலே முள் அம்மா' என்கிறது குழந்தை. தாய் என்ன செய்வாள்? முள்ளை எடுக்க 'ஊசியை'த் தேடுவாள். அதை விடுத்து, 'குழந்தை ஏன் அழுகிறது தெரியுமா. தெருவிலே சென்ற பொழுது, எங்கோ கிடந்த முள்ளொன்று காலில் தைத்து விட்டது. அதன் வலிதாங்காமல் அழுகிறது. இதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்? தெருவில் முள்ளை நானா போட்டேன். தானேகிடந்தது' என்று 'பிரசங்கம்' பண்ணினால் அவளைப்பற்றி நாம் என்ன நினைப்பது? ஆனால் நம் ஆட்சியாளர்கள் அப்படித்தான் பேசுகிறார்கள், பரிதாபம்!

இயற்கை விபரீதங்கள் ஏற்படும் என்ற அறிகுறிகள் தெரிந்த பொழுதே இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? உணவுத் தட்டுப்பாடு வராமல், உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து சேர்த்து வைத்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. செய்யாதது மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைப்பதில்லை யென்று வீம்பு பேசி வந்தனர்.

வெள்ளம் வருமென்று அறிந்திருந்தும், அணை போடாமலிருந்து விட்டு இன்று மட்டும் சோகக் குரலில் பேசுகின்றனர்!

இவர்களின் போக்கைப் பார்க்கிற பொழுது கேடு வரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே என்ற பழமொழிக்குரிய அனுபவ உண்மையைத்தான் நாம் பாராட்ட வேண்டியிருக்கிறது!

x x x

'உணவு நிலைமையை சீர் செய்வேன்' எனப் புறப்பட்ட கனம் முன்ஷியோ, 'மரம் நடுங்கள், மகாஜனங்களே' என்று 'விசித்திர' திட்டம் தந்தார்.

அவர் வந்து இன்று உணவு நிலையில் செய்துள்ள பெரிய மாற்றம், பன்னிரண்டை, ஒன்பதாக்கியுள்ளார்— அவர் 'திறமை' வாழ்க!

மக்கள் பசியால் துடித்திடும் பொழுது, எரியுந் தீயிலே எண்ணெய் ஊற்றுவது போல, 'வனமகோற்சவம்' செய்யச் சொன்னார் கனம். மக்களின் ஆத்திரம்தான் வளர்ந்ததே தவிர, வைத்த 'மரங்கள்' கருகிப் போயின!

எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யவில்லை. வேண்டாத விபரீத திட்டத்திற்காக வீண் பொருள் விரயம் செய்தார்.

வெளிநாடுகளிலிருந்து உணவு வரவழைக்கக்கூடாது என்று பேசி, நிலைமையை,நெருக்கடியை வளர்த்து விட்டார். சுயதேவை பூர்த்தி என்று பேசி உணவு நிலைமையைப் பயங்கரமாக்கிவிட்டார் நேரு. அதற்கு 'ஒத்து ஊதி' இன்று பன்னிரண்டை, ஒன்பதாக்கும் விபரீதபாதைக்குச்சென்று விட்டார் முன்ஷி.

மக்களை இவர்கள் என்ன நினைத்து விட்டார்களோ தெரியவில்லை — ஊதியவரை உப்பும் பலூன்களா? கொடுத்த அளவு சாப்பிட்டு விட்டு, உலவ! அவர்கள் உழைப்புக்கு, ஏற்ற அளவு, தரம், பக்குவம் முதலியவை தேவையில்லையா, அவர்கள் உட்கொள்ளும் உணவுப் பொருள்களுக்கு? நினைத்தபடி குறைப்பதும், கிடைக்கிற உணவைத் தருவதும் என்றால், இவர்கள் ஆளுபவர்களாக ஏன் உலவ வேண்டும்?

x x x

எங்கேங்கு உணவுப் பொருள் கிடைத்தாலும் நாம் ஏற்கத் தயார்.

நேரு கூறுகிறார் இன்று—சுயதேவை பூர்த்தித் திட்டம் 1951ல் வெற்றி பெற்றுவிடும், இனி வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்க வேண்டியதில்லையென்று பேசினார் அவரே, முன்னால்!

நாம், அன்றே சொன்னோம், வெளிநாட்டு உணவுப் பொருள்களை வாங்கினாலொழிய நெருக்கடி தீராது என்று—கேலி பேசினர்! இன்று, இந்த நாட்டிலிருந்து என்று கூட அல்ல, உலகத்தின் எந்தக் கோடியிலிருந்தாலும் ஏற்போம் என்று பேச வேண்டி வந்துவிட்டது!

இதனால் ஏற்பட்ட நஷ்டங்களை எண்ணுகிற பொழுதுதான் நம் வருத்தம் இரட்டிக்கிறது!

பட்டினி கிடக்கிறோம் — அது மட்டுமல்ல, முதலில் நாங்களே தரத் தயாராக இருந்த நாடுகளில் இப்பொழுது உணவு கேட்டால் இல்லையென்கிறார்கள். 'இருக்கிறது தரலாம்—விலை கொஞ்சம் அதிகமாகுமே' என்று 'பிகுவு'டன் பேசுகின்றனர். பேசத்தானே செய்வர்! முதலில் நாம் வேண்டாமென்று கூறிவிட்டு, இப்பொழுது வலியப் போய் கேட்டால், அப்படித்தானே கூறுவர்.

நஷ்டம் வளர்கிறது-உணவு நஷ்டம்-பொருள் நஷ்டம்-உலக மார்க்கட்டிலே, 'பிட்சா பாத்திரமேந்தி' நிற்கும் ஆளவந்தாரின் ஆளுந் திறமைக் குறைவைக் கிண்டல் செய்ய மாட்டார்களோ? ஆகவே, இவைகளுக்கு மேலாக, மான நஷ்டம்!!

இவர்கள் தவறை, இயற்கையின் மீது வைத்துத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

ஆடத் தெரியாதவள் கூடம் கோணல் என்றாள்—ஆளத் தெரியாதவர்கள், இயற்கை விபரீதம் என்கிறார்கள்-இந்த இருவருக்கும் என்ன வித்தியாசம்!

* * *

திராவிடத்தைப் பொறுத்தமட்டில், 'டெல்லி'யிடம் கை கட்டிடும் போக்கு கூடாது — உணவுப் பொருள்களை நேரடியாகவெளி நாடுகளிலிருந்து வரவழைக்கும் உரிமை பெறவேண்டும் என்று வற்புறுத்தினோம். வாய் மூடிக் கிடந்தனர்.

பர்மா, நொய்யரிசி வாங்கக்கூட முடியவில்லை, இவர்களால்! இன்று ஒன்பது அவுன்ஸ் என்றால் பத்து அவுன்ஸாவது கொடுக்க 'அருள்' பாலிக்கவேண்டும் என்று கூறுகின்றனர். இந்திய சர்க்கார் தங்கள் உதவியை 10 இலட்சம் டன் உணவு தானியமாக உயர்த்த வேண்டும் என்று 'கருணை மனு' போடுகின்றனர்.

நாம் சொல்கிறபொழுது அலட்சியப்படுத்துகிறார்கள்—பிறகு அவதிப்படுகிறார்கள்!

ஆடத் தெரியாதவள் என்று ஒப்புக்கொள்ள வெட்கம்தான் அவளுக்கு—ஆனால் பொதுமக்கள் குழப்பமல்லவா விளைத்திடுவர். கூடம் கோணல் என்றால் எந்த 'கோணல்' புத்திக்காரனும் ஒப்பமாட்டானே!

உரிமையில்லாமல், ஊராளும் வேடம் போடுவதால், நாட்டிற்கு கேடு, நாட்டோருக்கு நலிவுதான் விருந்தாக அமையும். ஆகவேதான் திராவிட நாடு பிரிந்தால்தான் நாம் நலமுடன் வாழ முடியும் என்று கூறிவரும் இக்குரலின் பொருள் வர வரப் புரிகிறது அவர்களுக்கு— அதற்கு ஏற்ற வழியமைக்கிறது உணவு நெருக்கடி!

x x x

உணவு நெருக்கடிக்குக் காரணம், இயற்கை விபரீதங்கள் அல்ல, இவர்களின் ஆட்சி விபரீதங்களே என்று நாம் சொல்கிறோம்—காங்கிரசாட்சியைக் குறை கூறுவதே இவர்களுக்கு வேலையென்று கூறிவிடுகின்றனர்.

நாம் விலகிக் கொள்வோம். இதோ பொருளியல் நிபுணர்— கோகலே அரசியல் பொருளாதார டைரக்டர், பேராசிரியர் டி. ஆர். காட்கில் கூறுவதைக் கூர்ந்து கவனிக்கட்டும். அவர் நம் கூடாரத்தைச் சேர்ந்தவரல்ல—அவர் கூறுகிறார்.

> இந்தியா, இன்று, மற்றவர் எள்ளி நகையாட, உலக அரங்கிலே பாத்திரம் ஏந்தி உணவுப் பிச்சை கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

படம் பிடித்துக் காட்டுகிறார், பேராசிரியர், நாட்டின் இன்றைய நிலையை. அதற்குரிய காரணங்களை அவரே விளக்குகிறார்.

> படுமோசமானநிலைமையைத் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட சர்க்கார் இப்பொழுது பழியை இயற்கையின் விபரீதங்கள், மழைக் குறைவு முதலியவைகளின் மீது போடுகிறது!

(6-ம் பக்கம் பார்க்க)

"கடை திறந்தாச்சி!"

—சி. என். ஏ.—

"அறிவாளி என்றால் எப்போதும் அறிவாளிதான்." — என்று களிப்புடன் கூறினர், முன்னாள் ஆப்காரி காண்ட்ராக்டர் முத்துச்சாமிப் பிள்ளை. அவர் கூறுவதைத் தன் புன்னகையால் ஆமோதிப்பது போல்ப் பக்கத்திலே நின்று கொண்டிருந்தார் பார்த்தசாரதி ஐயங்கார் என்ற, தமது பெயரை சாரதி என்று சுருக்கிக் கொண்டவர் — 'முத்து டாக்கீசின் மானேஜர்.' முத்துச்சாமியார் அறிவாளிகளைப் புகழ்வது கிடையாது — பார்க்கவே சமமதிப்பது கிடையாது — எனவே அன்று அவர் அறிவாளி என்றால் அறிவாளி தான் என்று பேசியது கேட்டுச் சிறிதளவு ஆச்சரியமடைந்தார் அமிர்தலிங்கம் — முத்துச்சாமியாரிடம் பட்ட மூவாயிரம் ரூபாய் கடனுக்காக இருபத்தையாயிரம் பெறுமானமுள்ள தம் சொத்துகளை ஈடுகாட்டியதுடன் போகாமல் நாளைக்கொரு வேளையாவது வீடுவந்து இதமாகப் பேசிவிட்டுப் போவதையும், கடமையாகக் கொண்டவர்.

"ஆமாங்க—அதுசரிங்க" என்றார் அமிர்தலிங்கம் — இது அவர் அன்றாடம் முத்துச்சாமியாருக்குச் செலுத்தும் 'வட்டி'த்தொகை.

"காரணம்என்னன்னு கேளுங்கோ —வெறுமனே ஆமாம் போட்டால் போதாது" என்று சாரதி தூண்டிவிட்டார்.

"சொல்லத்தானே போறாரு" என்று உபசார முறைப்படி பேசினார் அமிர்தலிங்கம்.

"இதுகளெல்லாம் தலைகால் தெரியாமல் குதித்தன — மதுவிலக்குச் சட்டத்தைக் குத்தம் குறை சொல்கிறவன் நாக்கு அழுகிப்போகும், அவன் நாசமாகிப் போவான், காங்கிரஸ் சர்க்காரிலே இது போலக்குறை சொல்லித்திரிகிற பேர்வழிகளைச் சும்மா விட்டுவைக்கப் போறதில்லே, என்றெல்லாம் கொக்கரிக்கிறார்களே —கொடுத்திருக்கிறான் பாரய்யா சூடு, சுரீல் சுரீல்னு கொடுத்திருக்கிறான். போதுமடாப்பா உங்க பரீட்சை உண்மையை அறிந்து கொள்ளுங்கன்னு வெளுத்துக் கட்டிவிட்டான். அறிவாளி, இதுகளுக்கெல்லாம் பயப்படுவானா! இதுகளோட தயவு அவனுக்கு ஏன்—இதுகளுக்கு வேணுமானா அவனோட தயவு வேணும்—ஏஞ்சாமி!" என்று முத்துச்சாமி மளமளவென்று கொட்டினார் தமது களிப்பை.

அமிர்தலிங்கம், அறிவாளி என்று யாரைக் கூறுகிறார், இதுகள் என்று யாரை ஏசுகிறார் என்பது புரியாமல் திணறக் கண்ட சாரதி, விஷயம் புரியல்லே—அப்படித்தானே" —என்று கேட்டுவிட்டு, "முதலாளி இப்ப என்ன சொல்றார்னா....நம்ம 'இந்து' பேப்பர் இருக்கேன்னோ, இந்து, அதிலே ஒரு அபூர்வமான விஷயம் வந்திருக்கு — சர்க்கரோட போக்கு சரியில்லே, கண்ணை மூடிண்டு போனா மேடுன்னும் தெரியாது, பள்ளம்னும் தெரியாது, ஆபத்தாகி விடும், ஆகையினாலே, கண்ணைத் திறந்துண்டு நடங்கோன்னு சர்க்காரைப் பின்னிப் பின்னி எடுத்து விட்டிருக்கு. அதைத்தான் முதலாளி உம்மிடம் எடுத்துச் சொல்றார்" என்று விளக்கமளித்தார் சாரதி.

அமிர்தலிங்கத்தின் திகைப்பு குறையவில்லை —வளர்ந்தது! 'இந்து' பேபர், சர்க்காரைக் கண்டிக்குமா — ஏஞ்சாமி! இரண்டும் ஒண்ணுதான்னு பல தடவை சொலியிருக்கிங்களே?" என்று கேட்டார் அமிர்தலிங்கம்!

சாரதிக்கு முத்துச்சாமியார் துணை நின்று, "தப்பான வழி போகாமெ, தவறான காரியம் செய்யாமலிருக்கிற, வரையிலேதானே, சர்க்காரை இந்து ஆதரிக்கும்—சர்க்கார் எப்படி எப்படி ஆடினாலும் ஓடினாலும் தாங்கிக்கொண்டா இருக்கும் இந்து. அது என்ன M. L. A-வா, M. L. C-யா! சர்க்காரிடம் இருக்கிற பேனாவெல்லாம், இந்து ஆபீஸ் பேனாவோட போராட முடியுமா—ஏஞ்சாமி!" என்று கூறினார். கூறிக்கொண்டே, "சாமி! அந்தத் தோப்பை இந்த வருஷமும் நமம கையை விட்டுப் போகாம பார்த்துக் கொண்டது நல்லதா போச்சு" என்று குழைந்து பேசினார்.

கொண்டுவந்து போட்டது தவிர நன்மை துளியும் கிடைக்கல்லே. திருட்டுக் கள்ளும் சாராயமும் தாராளமாக் கிடைக்குது. இலட்சணம் இப்படி இருக்கும்போது, எதற்காக மதுவிலக்குத் திட்டம்னு ஒண்ணை கட்டி அழுணும்—பேசாம விட்டுத் தொலையுங்கோ — வேறுமாறு ஒரு மனுஷன் இவ்வளவுக்கு மேலே சாப்பிடப்படாது, குடித்துவிட்டு வெறியேறி வீணை காலித்தனம் செய்துண்டு ஊரைக் கெடுக்கப்படாது அப்படி இப்படின்னு ஒரு கட்டு திட்டம், செய்யலாம், புத்திமதி கூறலாம், அதுதான் ஒரு அளவுக்காவது வெற்றிகரமாக இருக்கும் — மதுவிலக்குச் சட்டம் ஒரு பலனும் தராது—ன்னு, 'இந்து' பனமனன்னு படித்துக் காட்டுது—"என்றார்.

அதற்குப் பிறகு சாரதி 'இந்து' வை எடுத்துப் பார்த்துக்கொண்டே பேசலானார், "மதுவிலக்குச் சட்டத்தாலே எதிர்பார்த்த பலன் கிடைத்திருக்கா — இல்லே, அது வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் இருக்கா என்பது பற்றி கண்டுபிடித்தாக வேணும்-மதுவிலக்கு ஜோக்யமான திட்டம், புனிதமான திட்டம், புண்ய காரியம், ஆகவே, அதை மாற்றுவதோ ஒழித்துவிடுவதோ கூடாது என்கிற பிடிவாதம் கூடாது. மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்த பிறகு, குடிப்பழக்கமுள்ளவா, குடிக்கிறதை நிறுத்திவிட்டாளான்னு கவனிச்சா, இல்லேன்னு தெரியறது. அதிக பணம் கொடுத்து எப்படியோ திருட்டுச் சாராயம், மற்றும் பல போதைகளை வாங்கி, அவா சாப்பிட்டுக்கொண்டுதான் இருக்கா. போலீசார் வேட்டையாடி பலரைப் பிடித்திருக்கா — ஆனால், வேட்டை நின்னபாடில்லே. சட்டத்தை மதிச்சு, திருட்டுச்சாராயம் காய்ச்சப்படாது, விற்கப்படாது, குடிக்கப்படாதுன்னு எண்ணம் இதுவரையிலே ஏற்பட்டதாகத் தெரியல்லே. ஜெயில் பூராவும் இந்த மதுவிலக்குச் சட்டத்தை மீறினவா கும்பல் கும்பலா அடைபட்டு இருக்கா. இந்த இலட்சணத்திலே மதுவிலக்குத் திட்டம் இருக்கு. இதனாலே சர்க்காருக்கு 17 கோடி ரூபா வருமானம் போச்சு —விற்பனை வரி இதனாலேதான் அதிகமாச்சு—அது ஏழைகள் தலையிலே பெரிய பாரமா இருக்கு. ஆக மொத்தத்திலே பார்க்கறபோது, சட்டம் பலனும் கொடுக்கலே, நஷ்டம் அதிகமா இருக்கு. வீணா பிடிவாதம் செய்துண்டு, மதுவிலக்குச் சட்டத்தை மாத்தப்படாது, எடுக்கப்படாதுன்னு கல்லுப் பிள்ளையார் போல இருப்பது பிரயோஜனமில்லே மிதமிஞ்சிக் குடித்துப் பாழாகாதே, குடும்பத்தை நாசம் செய்கிற மாதிரியாக ஓயாக் குடிகாரனாக இராதே. அளவோட குடித்துவிட்டு, அடக்கமா இருந்துவிடுன்னு புத்திமதி சொல்லலாம் சர்க்கார்லே. கடைகளைக் கண்ட கண்ட இடங்களிலே வைக்காமல், குறைவான அளவிலே இருக்கும்படி கட்டுப்படுத்தலாம். இப்படிப்பட்ட காரியம் செய்தா போதும். குடிக்கவே கூடாது — கடைகளே இருக்கப்படாது—என்பதாகச் சொல்லி மதுவிலக்குச் சட்டம் ஒன்று வைத்திண்டு, பலகோடி ரூபா வருமானத்தையும் பாழாக்கிவிட்டு, அதே சமயத்திலே திருட்டுக் குடி தாராளமாப் புழங்கறதையும் தெரிஞ்சிண்டு, வெளியே சொன்னா வெட்கக்கேடுன்னு இருப்பதிலே யாருக்கு இலாபம். ஆனதாலே, மதுவிலக்குத்திட்ட சம்பந்தமாக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யுங்கோ—பரிசீலனை செய்து, இன்னமும் அந்தச் சட்டம் இருக்கவேணுமா, ரத்து செய்தா என்ன என்கிற விஷயமாக

"நான்தான் சொல்லிண்டிருக்கேனே —'பாளக்கயறை'க் கூடப் பாழ்பண்ண வேண்டாம், பழயபடி எல்லாம் தேவைப் படும்னு"-என்று கூறினார் சாரதி.

"நான் நம்பவில்லே; சாமி! ஏன்னா, நம்ம பக்கத்து M. L. A. போன மாதம் கூட்டிக் கொண்டு வந்தாரே 'மந்திரியை' — நம்ம பங்களாவிலே 'டீபார்ட்டி' வைத்தோமே...அந்த மந்திரி கூட சாயந்திரம் நடந்த கூட்டத்திலே பேசினார் — மதுவிலக்கு வெற்றி அடைந்திருக்கு—அங்கே இங்கே தப்பு தண்டா இருந்தாலும் போலீசார் அடக்கிக் கொண்டிருக்காங்க— எது எப்படியானாலும் மதுவிலக்கு திட்டத்தை மட்டும், எக்காரணத்தை முன்னிட்டும் 'ரத்து' செய்யப்போகிறதில்லே—ன்னு பேசினாரே, கண்டிப்பா — அதைக் கேட்டதிலே இருந்து, எனக்கு பழயபடி கடை வரும் என்கிற நம்பிக்கை போயிட்டுது" என்று பழய சம்பவத்தை எடுத்துரைத்தார் முத்துச்சாமியார்.

"அப்படின்னா, பழயபடி கள்ளுக் கடை திறக்கப் போறாங்களா!"— என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அமிர்தலிங்கம்.

"அதைத்தானே சொல்லவந்தார். மதுவிலக்கு திட்டம் ஓட்டை ஒடிசலாகிப் போய்ட்டுது — உருப்படியான பலனைக் காணோம் — ஊரார் தலையிலே புதுப்புது வரிகளைக்

பேபர், விளக்கமாகஎழுதி விட்டது" — என்றார் சாரதி.

"விரமா எழுதியிருக்குன்னு சொல்லு சாமி! மத்த பத்திரிகைக்காரனுங்களுக்கு அந்தத் தைரியம் வருமா! அறிவாளின்னா அறிவாளி தான்! நான் எழுதறேன் உண்மையை, நீ யாரால்றவனா இருந்தா எனக்கென்ன, உலகத்தையே ஆண்டா எனக்கென்ன என்கிற தைரியத்திலே இந்து பேப்பர் எழுதி பாருங்க—அதுதான் விசேஷம்" என்று முத்துச்சாமியார் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

முத்துச்சாமியாருக்கு, கைஎழுத்துப் போடமட்டும்தான் தெரியும் ஆங்கிலத்தில், அப்படியிருக்க, எப்படி 'இந்து' பத்திரிகையைப் படித்திருக்கமுடியும் — என்ற சந்தேகம் அமிர்தலிங்கத்துக்கு. ஆனால் கேட்கலாமா—மூவாயிரம் கடன் கொடுத்திருக்கும் முத்துச்சாமியாரை!! எனவே, மறைமுகமாகவும் நாசுக்காகவும் பேசுவதற்காக, சாரதியைப் பார்த்து, "எப்பொ பார்த்திங்க இந்துவை" என்று கேட்டார்.

முத்துச்சாமியார், "காலையிலே காப்பி சாப்பிட்டுவிட்டு—அது ஒரே கசப்பா இருந்தது—கோபமா உட்கார்ந்து கொண்டிருந்தேன் — சாமி வந்தாரு — கேட்டயளோ விஷயத்தைன்னு சொக்கிகிட்டே, என்னான்னு கேட்டா, பேப்பரை எடுத்து

கழகத் தோழர்களுக்கு

சென்னை, தோழர் டி.எம். பார்த்தசாரதி அவர்களால், தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த "மாலைமணி" கருத்திதழ் முன்போல, பக்களிடையில் பவனிவந்துகொண்டிருப்பது தோழர்கள் அறிந்ததாகும்.

'திராவிடநாடு' தினசரி இதழ் துவக்குவதற்கான ஏற்பாடுகள் பல இடையூறுகளினூடே செய்யப்பட்டும், ஆட்சியாளரிடமிருந்து இன்னும் மின்சாரவசதி போன்றவைகள், கிடைக்காததால், நமது எண்ணம் முற்றுப்பெறாத நிலையிலேயே இருந்து வருகிறது.

கழகச் செய்திகள், தாங்கி, கழக ஒலிகளோடு 'மாலைமணி'— நண்பர் பார்த்தசாரதியின் பெருமுயற்சியில், நடத்தப்பட்டு வருகிறது.

ஆகவே, கழக சம்பந்தமான நிகழ்ச்சிகளும் செய்திகளும், உடனுக்குடன் வெளிவரும் வசதி, இப்போது ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கழகத் தோழர்கள் இனிமேற்பட எல்லா செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் "மாலைமணி முத்துமாரி செட்டிதெரு மண்ணடி சென்னை" என்ற முகவரிக்கே அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

இனி, மேற்பட "திராவிடநாடு" இதழ் கட்டுரைகள் மட்டுமே தாங்கி வெளிவரும் என்பதையும் தோழர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்.

நல்ல புத்தகம்!

கமலினி

ஆசிரியர்:- டி. கே. மூர்த்தி

"மின்னலைப் போன்ற மறையும் வாழ்வில் நான் துன்பப்பட்டு மடியவே பிறந்தேன்.

—கமலினி

அதனை மறுக்கிறார் டாக்டர் தனை.'

அழகுபட சித்தரிக்கப்பட்ட அரிய கதை.

விலை 4: அணா கழிவு 25% செலவு இலவசம்.

தேவைக்கு:

சரோஜினி பதிப்பகம்,

(A) புதுச்சேரி.

ஒரு முடிவுக்கு வரனும்— அப்படின்னு 'இந்து' பத்திரிகை எழுதியிருக்கு" என்றார் சாரதி.

"எட்படி தைரியமா எழுதியிருக்கான் பார்த்தயா! அறிவாளி பயப்படமாட்டானேல்லோ" — என்று சாரதியின் பேச்சுக்குத் தன் பேச்சைப் பெருங்காயமாக்கினர், முத்துச்சாமி:

"மத்யப்பிரதேசத்திலே மதுவிலக்குச் சட்டத்தை இன்னமும் வைத்துண்டு அவதிப்படத்தான் வேனுமான்னு யோசிச்சு, அந்த சர்க்கார்லே, ஒரு கமிட்டி ஏற்பாடு செய்திருக்கா, பரிசிலனை செய்ய. அதுபோல இங்கேயும் ஏற்பாடு செய்யவேணும்னு ஙிந்து, ஸ்பஷ்டமா எழுதியிருக்கு" என்றார் சாரதி.

"கமிட்டி ஏற்பாடானு, மதுவிலக்கு சட்டம் ரத்தாகிவிடுமோ?" என்று கேட்டார் அமிர்தலிங்கம் சந்தேகத்துடன்.

"சந்தேகம் என்ன! மது விலக்கு படுமோசமான தோல்வியாயிடுத்து என்பதற்கான ஆதாரம் மலை மலையா இருக்கே — கிடைக்குமே" என்றார் முத்துச்சாமி.

"கமிட்டி ஏற்பாடு செய்கிறதன்னாலே, என்ன அர்த்தம்! காரியம் ஒட்டையாயிடுத்து என்கிறது தானே! மதுவிலக்குச் சரிவர நடந்திருந்தா, கமிட்டி என்கிற பேச்சே ஏன் கிளம்பப் போறது? சர்க்கார், தானுகவே, கள்ளுக் கடைகளை திறந்துவிடப்போகிறோம்னு சொல்றதுன்னு, அவ்வளவு அழகா இராதேன்னு—ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து, அவா இது சம்பந்தமாக பரிசிலனை செய்து பார்த்து, மதுவிலக்கு பிரயோஜனமில்லேன்னு சொல்லி. பிறகு அவாளோட யோசனையின்படி, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்கிறோம்னு சொன்னுத்தானே, கௌரவமா இருக்கும்" என்று கேட்டார் சாரதி.

"ஆமாம்—அதுவுஞ் சரி—" என்றார் அமிர்தலிங்கம்.

"இந்துவே எழுதியான பிறகு, இனி எத்தனை நாளைக்கு, இந்த மதுவிலக்குச் சட்டத்தை வைத்துக் கொண்டு குப்பை கொட்டப் போறீங்க!" என்று அலட்சியமாகப் பேசினர் முத்துச்சாமி.

"குடிக்கிறது பாவம் — ஜனங்க பாழாப் போறாங்கன்னு பல வருஷகாலமாகப், பேசி—எழுதி—பாழாப் போக வெள்ளைக்காரன் குடி கெடுக்கிறதுக்காகவே கள்ளுக் கடையை வைத்திருக்கான்னு நெருப்பைக் கக்கறது போலப் பேசி, ஏசி, பூஜை செய்து மணி அடிச்சி, மதுவிலக்குச் சட்டத்தை ஏற்பாடு செய்து, கள்ளுக்கடை இருந்த இடத்திலே காப்பிக் கடை, சுக்குத் தண்ணிக் கடை, பானகக் கடை இவைகளை மந்திரிகள் ஊரூருக்குப் போய் திறந்து வைக்க, அதைப் படம் போட்டுக் காட்டி, பாட்டுப் பாடிக் காட்டி, மதுவிலக்கு வந்ததாலே, இத்தனை குடும்பம் குதூகலமா இருக்கு, இவ்வளவு இலட்சம் ரூபா ஏழைகளிடம் மிச்சமாயிருக்கு, கொலை கொள்ளை அடிதடி கேசுகள் குறைஞ்சு போயிருக்கு, நாட்டிலே மக்களிடம் புதுக்களை ஏற்பட்டிருக்குதுன்னு பேசி, எழுதி, மதுவிலக்குச் சட்டத்தை, கண்ணைப் போலக் காப்பாத்த வேணும், காந்தி மகாத்மாவோட ஆத்மா சாந்தியாகணும்னு, கள் நாற்றம் நாட்டிலே இருக்கப்படாதுன்னு பேசி...மக்களிடம் சதா இதைப் பத்திப் பிரமாதமாப் பேசி விட்டு, இப்ப, மதுவிலக்கு சட்டம் ஏட்டுச் சுரையாக இருக்கு, ஆகையாலே அதை ரத்து செய்துவிடறது தான் நல்லதுன்னு சொன்னு—ஏஞ் சாமீ! ஜனங்க ரொம்பக் கோவப்படுவாங்களே—இப்படி உருப்படாத ஒரு சட்டத்தைச் செய்து, நாட்டை ஏன் குட்டிச்சுவராக்கினிங்க—வீண் வேலை—வரி மேலே வரி போட்டு வாட்டி விட்டிங்க—ஒரு காரியத்தைத் துவக்குறபோதே தெரிய வேணுமா, இது பலன் தருமா தாராதுன்னு, மதுவிலக்குச் சட்டம் பலிக்காதுன்னு பல பேர் சொன்ன போது, எவ்வளவு சீறினீங்க, இழிவாப் பேசினிங்க, அவங்களை; இப்ப, உங்க வாயாலேயே, மதுவிலக்குப் பிரயோஜனமில்லைன்னு சொல்ல வந்துவிட்டிங்களே — என்றெல்லாம் ஜனங்க பேசாமலா இருப்பாங்க." என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

சாரதி, "ஜனங்க பேசுவா முதலிலே, பிறகு இந்து இப்ப எழுதினதுபோல இரண்டு தடவை எழுதினு, சத்தம், தானு அடங்கி விடாதோ!" என்று பெருமையாகப் பேசினர் சாரதி.

'அறிவாளிகளே மதுவிலக்குச் சட்டம் பிரயோஜனமில்லேன்னு சொல்லிவிட்டா, பிறகு ஜனங்க கூச்சலிட்டா, யார் கவனிக்கப் போறாங்க" என்று மகிழ்ந்து கூறினர் முன்னாள் கள்ளுக்கடைக்காரர்.

"என்ன இருந்தாலும், மதுவிலக்குச் சட்டம்னு ஒண்ணு செய்து பிறகு அதை ரத்து செய்கிறதுன்னு, வீண் வேலை தானே" என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

"வீணுகப் போகல்லே, அந்த முயற்சி. எப்படின்னு, மதுவிலக்குச் சட்டம், அடியோடு குடியை ஒழிக்காமப் போனலும், அப்படி ஒரு சட்டம் செய்ததாலே, இரண்டு மூன்று வருஷமா, காங்கிரஸ் சர்க்காருக்குக் கியாதியைத் தேடிக் கொடுத்தது—இலாபந்தானே அது. என்ன செய்துட்டா காங்கிரஸ் சர்க்கார்னு, விஷமிகள் கேட்கற போது, "மதுவிலக்குச் சட்டம் செய்திருக்காளேடா மண்டு! அதை விடவா வேறே ஒரு நல்ல காரியம் இருக்கு"ன்னு சொல்லி அவா வாயை ஒரே அடியா மூட முடிந்ததே! இலாபமில்லையோ அது" என்றார் சாரதி—

அது மட்டுமில்லே சாமி! அதை ஏன் செய்யல்லே, இதை ஏன் செய்யல்லே, பள்ளிக்கூடம் கட்டு, பாலம் கட்டு, அதைச் செய் இதைச் செய்யின்னு, ஜனங்க கூச்சலிட்ட போதெல்லாம், நம்ம மந்திரிகளெல்லாம், மதுவிலக்குச் சட்டம் செய்திருக்கோம், அதனுலே பலகோடி ரூபா நஷ்டம் சர்க்காருக்கு—ஆகையாலேதான் புதுசா பல நல்ல காரியம் செய்ய முடியாமலிருக்குன்னு சொல்லவும், ஜனங்களும், நியாயந்தானே, மதுவிலக்கு புண்ய காரியமாச்சேன்னு எண்ணவும், இந்த மதுவிலக்கு சட்டம்தானே பயன்பட்டு வந்தது. பொதுவாக் காங்கிரஸ் கட்சிக்கே இது ஒரு பெரிய இலாபம் இல்லையா" என்று முத்துச்சாமியார் கூறினர்.

"அப்படின்னு, கூடிய சீக்கிரம் கள்ளுக் கடைகளைத் திறந்து விடுவாங்க..." என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

"நேக்கு அப்படித் தோணலலே ..." என்றார் சாரதி. முத்துச்சாமி திடுக்கிட்டுப் போனர். "ஏஞ்சாமி! இந்துவே இவ்வளவு வெள்ளையா எழுதியான பிறகு, இன்னும் என்ன யோசனை சர்க்காருக்கு" என்றார் முத்துச்சாமி. "கள்ளுக் கடைகளை இப்ப திறந்தா, எலக்ஷன் வருகிறபோது, எக்கச் சக்கமா இருக்கும் பாருங்கோ காங்கிரஸ் கட்சிக்கு. —அதனலே, இந்த எலக்ஷனை முடிச்சிண்டு, அதிலே ஜெயித்தானதும், இந்து சொன்னபடி கமிட்டி வைத்து, காரணம் காட்டி, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து விடுவா. அதுதான் யுக்தம்னு தெரியறது" என்றார். முத்துச்சாமியாருக்குக் கவலையாகிவிட்டது. கள்ளுக் கடையைத் திறந்தா, எலக்ஷன்லே தோல்வி வந்துவிடும்னு காங்கிரஸ் கட்சி பயப்படும்னு சொல்றிங்களா?" என்று கேட்டார் முத்து.

"ஒரு விதத்திலே பார்த்தா, ஐயர் சொல்றது சரியாகத்தானே இருக்கு. ஓட்டு கேட்டா, ஜனங்கள் சொல்வாங்களேல்லே, மகா யோக்கியன்தாம்பா நீ— கள்ளுக் கடையை மூடிவிட்டேன், பாவத்தைப் போக்கி விட்டேன்—ஏழையைக் காப்பாத்தி விட்டேன்னு பேசினே, இப்ப மறுபடியும் கள்ளுக் கடையைத் திறந்து விட்டே—உன்னை எப்படி நம்ப முடியும் — சொல்லிலே நாணயம் இல்லையே — செயலிலே யோக்பதை காணும்மேன்னு பேசுவாங்களே" என்றார் அமிர்தலிங்கம். கோபமாகக் கிளம்பினர் முத்துச்சாமி.

"பேசட்டுமே — பேசினு தீர்ந்து போச்சா-நாங்களெல்லாம் சும்மாவா இருப்போம்-காங்கிரசுக்கு ஜே! ஜே! —ன்னு கிளம்ப மாட்டோம! எங்களோட ஆதரவு கிடைக்காதா காங்கிரசுக்கு. எலக்ஷனைப்பத்தி ஏன் பயப்படவேணும். நாங்க இருக்கரோம் உதவி செய்ய" என்றார். சாரதியின் முகத்தில் களை பிறந்தது. "நான் மண்டு! இதைப் புரிந்து கொள்ளவில்லை. அமோகமான ஆதரவு கிடைக்கும் காங்கிரசுக்கு, மதுவிலக்கை ரத்து செய்தா!" என்றார் சாரதி.

"ஆர்ப்பாட்டமான ஆதரவு கிடைக்கும்னு சொல்லு, சாமி! நம்ம கடைகளிலே இருந்தே ஓட்டர்களை ஊர்வலமா கொண்டுபோய் ஓட்டு போடச் சொல்லுவோம் காங்கிரசுக்கு"—என்று உறுதி அளித்தார் முத்துச்சாமியார்.

அமிர்தலிங்கம் அதை மறுக்கவில்லை. விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினர் விசாரத்துடன்.

அமிர்தலிங்கத்தின் ஒரே மகள் பாரதி — பாரதியின் கணவனுக்கு, சென்னை சர்க்கார், மதுவிலக்குப் பிரசாரகர் வேலை கொடுக்கப் போவது உறுதியாகிவிட்டது, இனிக் கவலை இல்லை, என்று, அன்றுதான் அவருக்குக் கடிதம் வந்திருந்தது. விசாரம் எற்படாமலிருக்க முடியுமா?

வீடு சென்றார் — வாசலிலேயே காத்துக் கொண்டிருந்த வரதராஜன் — அவர் தம்பி—புன்னகையுடன், "கடை திறந்தாச்சி" என்றான். அமிர்தலிங்கம் கோபமாக, "சரி—சரி — அந்த வெட்கக்கேட்டைச் சொல்லவும் வந்து விட்டீர்களா" என்று பேசினர். வரதராஜன் திணறிப் போனன்.

"இப்படி எறிஞ்சு விழக் காரணம் என்ன?" என்று கேட்டான். "அடடே, நீயாடா, தம்பி!"—என்று கேட்டார் அமிர்தலிங்கம். "நான் வேறே ஏதோ நினைப்பிலே, வேதனையிலே இருந்தேன் — உன்னைக் கவனிக்கவில்லை—என்னமோ பேசிவிட்டேன்—சரி — என்ன சொன்னே" என்று கேட்டார் சாந்தமாக. "கடை திறந்தாச்சின்னு சொன்னேன் அண்ணு" என்றான் வரதராஜன். "எந்தக் கடையை" என்று மீண்டும் திகைப்புடன் கேட்டார் அமிர்தலிங்கம்"

"கதர்க்கடை!" என்றான் வரதராஜன். "மறந்துவிட்டேண்டா தம்பி, மூனு மாசமாச் சொல்லிக்கொண்டிருந்தாயே, திறந்தாச்சா" — என்றார் அமிர்தலிங்கம். "ஆமாம், நல்ல நாளாம் இன்னக்கி, 'நம்ம சாரதி சொன்னர்" என்றான் வரதராசன்.

—

பகுத்தறிவு

ஆசிரியர்: ப. கண்ணன்

பொங்கற் புது நாளில் பொங்கிய 'பகுத்தறிவு'க்கு எங்கும் வரவேற்பு. வாங்கிப் படித்து மகிழ்கின்றனர். பாராட்டுகின்றனர்.

தனிப் பிரதி 0 2 0
ஆண்டு சந்தா 1 8 0

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம், சேலம் Dt.

சந்தாதாரர்களுக்கு!

சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், மணியார்டர் அனுப்பும் பொழுதும் தங்கள் சந்தா எண்ணை தவருது குறித்து அனுப்பவும். அப்படி சந்தா எண் குறிக்கப்படாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டாதுஎன்பதை அறியவும்.

மானேஜர்.

தோழர்களுக்கு!

*

காகித விலை கடும் 'விஷம்'போல ஏறிக்கொண்டேயிருப்பதோடு, கேட்கும் அளவில் கிடைப்பதும் அருமையாகி வருகிறது. இந்த நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்கவேண்டிய 'சுயராஜ்ய சர்க்காரோ', 'இத்தனைப் பக்கங்கள்தான் பிரசுரிக்கலாம்' என்று தாக்கீது பிறப்பிப்பதில் சிரத்தை காட்டுகிறதே தவிர, நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனத் தென்படவில்லை.

திகைப்பு அதிகமாகிறது, நமக்கு. நெருக்கடியினூடே தத்தித் தவழும் நமக்கு, இந்நிலை, புதுச்சுமைகளைச் சுமத்தியுள்ளது.

ஆகவே, பத்திரிகையின் பக்கங்களைக் குறைக்கவேண்டிய, கட்டாய நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விட்டோம்.

இந்த இதழ் 6 பக்கங்களோடு வருகிறது.

இனிமேற்பட, கட்டுரைகள் தாங்கி 'திராவிட நாடு' முன்போல வெளி வரும்.

விலையை உயர்த்தி, சிக்கலைத் தீர்த்துக்கொள்ளும் வழியை நாம் விரும்பவில்லை.

ஆகவே, காங்கிரஸ் ராஜ்யத்தின் 'அருமை'களை யுணர்ந்துள்ள நண்பர்கள், நமது நிலையை எண்ணி, மன ஆறுதல் கொள்வார்கள் என நம்புகிறோம்.

'திராவிட நாடு' இரண்டணு விலையில், இரு பக்கங்கள் குறைக்கப்பட்டு, நிலைமை சீர்படும் வரையில் வெளிவரும்.

தவிர்க்கமுடியாத, இந்த நிலைக்கு மன்னிக்கவேண்டுவதுடன், எப்போதும்போல் இதழை ஆதரித்து வரும்படியும் கேட்டுக்கொள்கிறோம் — வணக்கம்.

—

'திராவிடத் தென்றல்'

திங்கள் வெளியீடு
(ஆசிரியர்: அ. ச. பாலு)
இதழ் 2 அணு ஆண்டு சந்தா 1.12-0
விற்பனையாளர்கள் தேவை.

'திராவிடத் தென்றல்'
ஆராய்ச்சிப் பதிப்பகம்,
பொள்ளாச்சி S. I.

திராவிடம், நாங்கள் இழந்த செல்வம்

கேரளத்தில் நம் குரல் கேட்கிறது

பிரிவினை எங்கள் உரிமை

நிருபர்கள் மாநாட்டில் பொதுச்செயலாளர்

நாஞ்சில் மாவட்ட மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரையை மலையாளப் பகுதியைச் சேர்ந்த பத்திரிகை நிருபர்கள் பன்னிரண்டு பேர் பேட்டி கண்டு பேசினர்.

டிச. 30: பகல் 2 மணியிலிருந்து 3½ மணி வரை மேற்படி சந்திப்பு நடைபெற்றது.

நாகர்கோயில் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

சந்திப்புக்கென ஏற்பாடு செய்திருந்த தனி மண்டபத்தில் மேற்படி பத்திரிகையாளர்கள் பொதுச் செயலாளரைச் சந்தித்தனர். அவர்கள் சந்தேகக் கேள்விகளுக்கெல்லாம், தக்கவிடைகள் அளித்து தெளிவுபடுத்தினார் பொதுச் செயலாளர்.

இதில் கலந்து கொண்டவர்களின் விவரம்:— கேரள கௌமதி, தேசபந்து, மலையாளி, தட்சணபாரதி, தென்குரல், தேன்திலகம், வஞ்சி நாடு, தேவி, நண்பன், ராஷ்டிரவேதி, மலையாள ராஜ்யம், தியாக நாடு ஆகியபத்திரிகைகளின் நிருபர்களும், திரு. வி. தாஸ் எம். எல். ஏ.வும் கூடியிருந்தனர். சென்னை லிபரேடர் இதழ் நிருபரும் உடனிருந்தார்.

திராவிட நாட்டில் பொருளியல், அரசியல், சமூகவியல், கலையியல், ஆகிய எல்லாப் பிரச்சினைகளிலும் பட்டும் தொட்டும் ஓடின, அவர்கள் எழுப்பிய கேள்விகள். அவைகளுக்கெல்லாம் விடையளிக்கப் பட்டாலும், இந்த மிக முக்கியமான சிலவற்றை மட்டும் சுருக்கித் தருகிறோம்.

நி:- தங்கள் இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்கள் என்ன?

பொ. செ:- சமுதாயத் துறையில், சாதி, மத பேதங்களை யொழிப்பதும், பொருளியலில் சுரண்டலொழிந்த பொருளாதார சமத்துவ நிலை ஏற்படச் செய்வதும் அரசியலில் வடநாட்டுப் பிணைப்பிலிருந்து திராவிடத்தைப் பிரிப்பதுமாகும்.

நி:- அகில உலக ஒற்றுமையில் (Internationalism) உங்களுக்கு அக்கறையில்லையா?

பொ. செ:- பல தேசத் தோழர்களின் கூட்டு முன்னணிதானே அது!

நி:- பின், திராவிடஸ்தான் கேட்கிறீர்களே! பிரிவினையை அல்லவா வற்புறுத்துகிறீர்கள்?

பொ. செ:- பிரிக்கச் சொல்கிறோம், இந்திய மத்திய தொடர்பிலிருந்து!

நி:- இந்தியாவின் ஒரு பகுதி தானே, தாங்கள் கூறும் திராவிட நாடு.

பொ. செ:- இல்லை. அது தனி நாடு—இந்தியாவின் பகுதியல்ல — இந்தியாவின் பகுதி என்று கூறுவதை நாங்கள் மறுக்கிறோம்.

நி:- இந்தியாவிலிருந்து பிரிகிற நீங்கள் எப்படி அகில உலக ஒற்றுமையை ஏற்றவராவீர்?

பொ. செ:- திராவிட நாட்டை, அகில உலக நாடுகளிலொன்றாக்கவே நாங்கள் பாடுபடுகிறோம்.

நி:- திராவிடஸ்தானைப் பற்றி இன்னும் சற்றுத் தெளிவாக விளக்குவீர்களா?

பொ. செ:- தாராளமாக......திராவிட நாடு, புதிதாக கேட்பதல்ல—ஏற்கெனவே எங்களுக்குச் சொந்தமாக இருந்த நாடு. வெள்ளையராட்சியிலே தான் ஒரு பிணைப்புக்குள் சிக்கிக்கொண்டது. நாங்கள் இழந்த நாடு திராவிடநாடு, இழந்ததை மீண்டும் பெறும் உரிமை எமக்கு உண்டு.

நி:- உங்கள் போராட்டத்திற்கு இந்திய சட்டம் இடந் தருமா?

பொ:- இந்திய அரசியல் திட்டத்தையே மாற்றியமைக்கவேண்டுமென்பதே எங்கள் அவா. இந்திய சட்டத்தைத் திருத்தியமைத்து, மாகாண சர்க்காரிடமே எல்லா அதிகாரங்களையும் இருக்கச் செய்யவேண்டுமென்பதே எங்கள் நோக்கம்.

நி:- 'டெல்லி' தானே உங்கள் பிரதிநிதி — அதனிடம் தெரிவிப்பது தானே முறை —

பொ. செ.- முதலில் திராவிட மக்களை அதற்குத் தயாராக்கவேண்டாமா? அதைச் செய்கிறோம்.

நி:- திராவிட நாடு என்பது பிரிவினை கோரிக்கைதானே — டெல்லியிடம் சொல்லித்தானே பெறமுடியும்?

பொ. செ:- திராவிடஸ்தான் இயக்கத்தை சற்றுத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். சிலர், இந்த இயக்கத்தைப் பாகிஸ்தான் இயக்கத்தைப் பார்த்துக் கிளப்பிடும் கூச்சல் என்கின்றனர். அது தவறு. வேண்டுமென்றே செய்கிற பொய்ப் பிரசாரம். பாகிஸ்தான் என்று ஜின்னா கேட்பதற்கு முன்னால், திருவாரூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். முதலில் தமிழ்நாடு தமிழருக்கே என்றோம் பிறகு திராவிட நாடு திராவிடருக்கே என்றோம். மேலும், பாகிஸ்தான் இயக்கத்தோடு இதனை ஒப்பிடவேண்டிய அவசியமில்லை, ஏனெனில், இந்த வெளியேற்றப்படவேண்டிய அந்நியர் பெரும் அளவில் இல்லை ஆகவே. அகதிகள் பிரச்சினை, ஜனப்பரிவர்த்தனை சிக்கலோ எதற்கும் இடமில்லை. இரத்தப் பெருக்கோ, குழப்பமோ, குமுறலோ எதுவும் ஏற்படாது.

நி:-திராவிடஸ்தான் என்று கேட்பது, பாகிஸ்தான்போலத்தானே— அதில் ஒன்றும் தவறில்லையே!

பொ. செ:- அந்த வகையில் சரிதான்—'காபி' படிக்கிறோம் என்று கூறுவது தவறு உதாரணமாகச் சொல்கிறேன்—இந்தியாவில் பல வீடுகள் உள்ளன. இந்திய யூனியன் என்ற சுற்று மதில் இருந்தது. பாகிஸ்தான் வீட்டிற்கு தனி மதிலும், வாயிற்படியும் அமைத்தது போல, திராவிடஸ்தான் வீட்டிற்கும் வேண்டும் என்கிறேன்.

நி:- வெளிநாட்டுப் படையெடுப்பு வந்தால்...?

பொ. செ:- அத்தகைய விரும்பத்தகாத நிலைகளை ஆரம்பத்திலேயே ஏன் கற்பனை செய்துகொள்ள வேண்டும்?

நி:- பக்கத்து நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்குமா?

பொ. செ:- கிடைக்கும். ஆனால், திராவிட நாட்டின் எல்லைக்குள்ளேயே எங்கள் சொல்லுக்கு ஆதரவு திரட்டுகிறோம். வெளி நிலைகளைப் பற்றி இப்பொழுது யோசிக்க நேரமுமில்லை—அவசியமுமில்லை.

நி:- திராவிடஸ்தானில் கேரளத்தின் நிலை என்ன?

பொ. செ:- திராவிடக் கூட்டாட்சியில் அது ஒரு அங்கம் வகிக்கும். சிலர், மலையாளிகளையும், மற்றவர்களையும் ஆட்டிப் படைக்க, தமிழர்கள் செய்யும் சூழ்ச்சியே, திராவிடஸ்தான் இயக்கம என்று வேண்டுமென்றே கூறுவது தவறு.

நி:- அப்படியானால்...

பொ. செ:-திராவிடஸ்தான் ஒரு கூட்டாட்சி—அதில் தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய பகுதிகள் அடங்கியிருக்கும், அதற்கு தனித்தனியே சட்டசபைகள் சுதந்திர வாழ்க்கை, சுய நிர்ணய உரிமை எல்லாம் உண்டு. அங்கங்கே, அந்தந்த வட்டாரமொழியே ஆட்சி மொழியாக விளங்கும். அகில உலகத் தொடர்பிற்கும், கூட்டாட்சி முறைக்கும் ஆங்கிலமே ஏற்றமொழியெனக் கருதுகிறோம்.

நி:- நாஞ்சில் நாட்டின் நிலையென்ன?

பொ. செ:- நாஞ்சில், தமிழகத்துடன்தான் சேரும். இன்னும் திருவாங்கூரின் அரசியல் வாழ்வுச் சிக்கல்களைப் பற்றிய முழு உண்மைகள் கிடைக்கப் பெற்றவுடன் இன்னும் தெளிவான விளக்கங்கள் தர இயலும்.

நி:- இமயம் இருக்கிறது, இந்தியாவின் பாதுகாப்பு எல்லையாக, அது போல் திராவிடத்திற்கில்லையே!

பொ. செ:- விந்தியமிருக்கிறது என்று உடனே சொல்லலாம். ஆனால் ஒரு நாட்டிற்கு மலையிருந்துதான் எல்லையாக முடியுமென்றில்லை. இங்கிலாந்திற்கும் அயர்லாந்துக்கும் என்ன எல்லை? பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் பாதுகாப்பு எல்லை எவை? மேலும், நாம் விரோதத்தை விரும்பாதவர்கள்—மேலும் உலகம் போரை வெறுக்கும் காலம் இது.

நி:—தமிழகத்தில் மட்டுமே இந்த எண்ணம் பரவியுள்ளது?

பொ. செ:- அப்படியில்லை. எங்கும் அந்த எண்ணம் பரவிக்கொண்டே இருக்கிறது. உதாரணமாக ஆந்திர நாட்டில் வடமொழிக்கு எதிர்ப்பு இயக்கம் இருந்து வருகிறது. மலையாளம், தெலுங்கு, கன்னடம் எல்லாம் வடமொழியால் வாழ்விழந்தவைதான்.

நி:- நீங்கள் எப்படி திராவிடஸ்தான் இயக்கத்தைப் பரப்ப முயற்சி செய்கிறீர்கள்?

பொ. செ:- பொது மக்களிடம் திராவிடநாட்டுப் பிரிவினையை பற்றிப் பிரசாரம் செய்கிறோம். வடநாட்டு எதிர்ப்புணர்ச்சியை, வடநாட்டு மந்திரிகளுக்கு கருப்புக் கொடி காட்டல், வடநாட்டுச் சுரண்டல் முறைகளைத் தடுக்க அடையாள மறியல் செய்தல் போன்றவைகள் மூலம் டெல்லி ஏகாதிபத்தியத்திற்கும் எங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி வருகிறோம்.

நி:- உங்கள் கழகத்தின் சட்டதிட்டங்களை நாங்கள் அறியலாமா?

பொ. செ:- மாகாண மாநாட்டில் தான் முழு உருவடையப் போகிறது. இப்பொழுது பொதுச்செயலாளர் ஒருவர் தலைமையில் பல்வேறு குழுக்கள் வேலை செய்து வருகின்றன

நி:- நாகர்கோயிலில் மாநாடு என்றால் கேரளத்திலே மாநாடு என்று சொல்கிறார்களே இது சரியா?

பொ. செ:- நாஞ்சில் — கேரளத்தின் நுழைவுவாயில் — எனினும் தமிழகத்தைச் சேர்ந்த மாவட்டமே!

நி:- ஆரியர்கள், உங்கள் ஆட்சியில் எந்நிலை பெறுவார்கள்?

பொ. செ:- பிரிவினை ஆட்சியை ஒத்துக்கொண்டவர்கள் எல்லோரும் நிம்மதியாக இருப்பர்

நி:- உங்கள் ஆட்சியில் விசுவாசம் கொண்டு அவர்கள் இருந்தால்...

பொ. செ:- விசுவாசத்தோடு இருப்பது, திட்டங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால், எவரும் திராவிட அரசிலே குடிமக்கள் ஆகி விடலாம்.

நிருபர்கள் மாறி மாறி கேள்விகள் கேட்டவண்ணமிருந்தனர். இறுதியில், தங்கள் தங்கள் பத்திரிகைகளில் இந்தப் பிரச்சினையைப் பற்றி எழுதுவதாகவும், தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களைப் போக்கியமைக்கு நன்றி தெரிவித்தும் கொண்டனர். பொதுச் செயலாளரும், அவர்கள் ஒத்துழைப்பு மட்டும் முழு அளவில் கிடைத்துவிட்டால், இலட்சிய நிறைவேற்றம் சுலபத்தில் முடிந்துவிடும் என்று கூறி, நன்றி கூறினார்.

பிறகு, தேனீர் விருந்து நடைபெற்றது.

மன்றல் விழா

★

திருப்பத்தூர் மீனாட்சி டாக்கீசில்
1—2—51 காலை 8½-மணி
க. விசுவநாதன்
வே. தனலட்சுமி
வாழ்க்கை விழா
பொதுச் செயலாளர்
அண்ணாதுரை
தலைமையில் நடைபெறும்.
கவிஞர் பாரதிதாசன், சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி கலந்து கொள்வர்.
(Ad) K. ஜயராம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எழுதிய நூல்கள்
சந்திரோதய வீரயம் ரூ. 1
(அழகிய மூவர்ண முகப்புடன் கூடிய சிறந்த பதிப்பு)
ஆண்களை நம்பலாமா?
அ. 3
அந்த இரவு அ. 8
(மூவர்ண முகப்புடன் கூடிய சிறந்த காதல் சித்திரம். ரா. தணலன் எழுதியது)
நாசகார சமூகம் அ. 8
(அறிஞர் எம். என். ராய் எழுதியதின் மொழிபெயர்ப்பு. இருவர்ண ஆர்ட் உரையுடன்)
விற்பனைக்கழிவு 25% செலவு இனாம்
—தேவைக்கு எழுதுங்கள்—
ஜனக்குரல் காரியாலயம்,
(A) துறையூர், திருச்சி Dt.

நெசவாளி துயர் பாரீர்!

நடந்திடும் வீரர் சேலம் ஏ. சித்தையன், தோழர் கே. பூர்ணையா இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கேட்டது நூல், தந்ததோ விலங்கு!! ஆனல், நெசவாளிகள் கலங்கிவிடவில்லை.

தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தொடர்ந்து மறியல் நடந்தது — வெற்றி பெற்றனர் தோழர்கள்—காங்கிரசாட்சி பணிந்தது!

பட்டினியால் சாவு இங்கு' பவனி வரும் மந்திரிகளுக்குப் புரிவதில்லை நாம் சொன்னலை! நூல் தரமுடியவில்லை இவர்களால் — ஏன்? நூல் தரும் பொறுப்பு மத்திய சர்க்காரிடம். 'டெல்லி' கையிலே பிடி, இவர்களோ, அந்த 'அதிகார சவுக்கின்' அடி விழ விழ, ஆடுகின்றனர் அவர்கள் விருப்பப்படி! இதனல் தான் திராவிட நாட்டைப் பிரி என்கிறோம் நாம், பிளவு கூடாது என்று உபதேசம் புரிகின்றனர் அவர்கள்!

கடைசியில் தடையுத்தரவை 'வாபஸ்' பெற்றது, சர்க்கார். தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர், சமாதான ஒப்பந்தம் பேசப்பட்டது.

தொழிலாளர் பிரச்சினைகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாகவே இருக்கிறது—நெசவாளித் தோழர்களின் கண்ணீர் துடைத்திடவேண்டும் என்று சர்க்காரை பலமுறை கேட்டுள்ளோம்—மாநாடுகளிலெல்லாம், இக்குறை போக்க மார்க்கம் காட்டியிருக்கிறோம். கைத்தறி துணிகளையே, உடுத்துவது என்று தீர்மானித்துள்ளோம்.

நெஞ்சுரம் மிக்க நம் அருந் தோழர் சித்தையனைச் சிறைப் படுத்திற்று அரசாங்கம்—ஆனல், அவர் வழி நிற்கும் தொழிலாளர் படையின் எதிர்ப்புத் தாங்க முடியாமல் விடுதலைசெய்து விட்டது, காங்கிரஸ் ஏகாதிபத்தியம்!

சிறைக்கு வெளியே நம் தோழர் நாராயணசாமி அரிய பணியாற்றியுள்ளார், ஆளவந்தாரே, ஆச்சர்யத்தால் பதுமையாகும்படி! இன்னும் பல முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிறைப் படுத்தப்பட்டனர்! அவர்களைப் பெல்லாம் பாராட்டுகிறோம்—வாழ்த்துகிறோம்-அதே நேரத்தில் 'முருக்கமரத்'திலிருந்து இறங்கி வந்துள்ள ஆட்சியாளருக்கு நெசவு தொழிலாளரின் குறை போக்க மார்க்கம் காணட்டும், நன்றே—அதுவும் இன்றே என்று நினைவு படுத்துகிறோம்.

✻

வந்துவிட்டது! வந்துவிட்டது!

ஒரே முத்தம்

தோழர் மு. கருணாநிதியின் கருத்தையள்ளும் நாடகம். கலை மதிப்பு வாய்ந்தவை.

கண் கவரும் புதிய அழகிய மேலட்டையுள்ள இரண்டாம் பதிப்பு. விலை ரூ. 1-4-0

கன்னியின் சபதம்

தோழர் ப. கண்ணனின் செந்தமிழ்ச் சுவை கனிந்த நாடகம். வானொலிமூலம் மக்கள் மனதைக் கவர்ந்தது.

பெண்மையின் வீரச் சித்திரம்.

அழகிய பதிப்பு. விலை அ 8

வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

(A) விவரங்களுக்கு:

தென்றல் நூற் பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம்: சேலம் மாவட்டம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

செல்லக்கண்ணம்மாள்
ஏ. பி. துரைராஜ்
சி. எம். சாமி
எம். கலைமணி
பி. ரங்கநாதன்
எம். எஸ் கோவிந்தராஜன்

திருச்சி:

டி. வி. முத்துகிருஷ்ணன்
எம். எஸ். மணி
அம்பில் தர்மலிங்கம்

திண்டுக்கல்:

கருப்பண்ணன்
எஸ். பானு
என். முத்து
அய்யாச்சாமி
கலைமணி
எம். ஆர். ராமசாமி
டி. ராதா
மாரிமுத்து
இல. வீரராகன்
பி. எ. காதர்
நெப்போலியன்
இலட்சுமணன்

மதுரை:

டி. வி. தங்கராசு
ல. வ. கிருட்டிணன்
எம். குருதாஸ்
சி. பாக்கியம்
கே. எஸ் ராசமான்
எம். எஸ் இராமையா
எம். பிச்சை
செல்லம்
கலைதூதன்
எம். ரத்தினசாமி
அ. ராமசாமி
எம். எஸ். நடைஅரசு
எஸ் கே. சண்முகம்
எம். கதிர்வேலு
எம். வி. மணி
பி. ராமசாமி
ஏ. எம். பால்
கு. ரத்தினம்
பெரியநாயகம்
நாகசுந்தரம்
சுப்பிரமணியம்
அரிகிருஷ்ணன்
எஸ். தேவஇரக்கம்
யாகோப்
சி. வேலாயுதம்,
ச. சுப்பிரமணியம்
மு. ஆதிநாராயணன்
ஆ. பொன்னையா
சி. அய்யம்பெருமாள்
எஸ் முத்து
ப. சினி
ஆ. ரெத்தினம்
கு. நாகு
கு. மீனட்சிநாதன்
சு. பெருமாள்
கு. ப. கணபதி
தே முத்துச்சாமி
கு. வேலு
பாப்பையா
கி. இசக்கிநாதன்
அய்யனர்
ஏ. ரஞ்சிதம்
இப்ராகிம்
உ. அருணசலம்
து. பெருமாள்
கருப்பையா.

வழக்குத் தொடரப்பட்டிருப்போர்

குளித்தலை

தி. வீ. முத்துகிருஷ்ணன்
அ. வாசு
வீ. பானு
ரா. ராமச்சந்திரன்
மா. அர்த்தநாரி
விட்டல்
வைத்திலிங்கம்
ரா. சுப்பிரமணியம்
ஓ. மாணிக்கவாசகன்
ச. ராமலிங்கம்
குருநாதன்
பாஷா

சுவரொட்டி ஒட்டியமைக்காக கைது

கோவை

கோவிந்தராசன்
எஸ். அங்கமுத்து
ராயப்பன்
சுந்தரம்

திருச்சி

ஆமூர் வை. கந்தன்
ரெ. கோவிந்தன்
புத்தூர் என். பாண்டியன்
தங்கையன்

தண்டனை அடைந்தோர்

மதுரை

காஞ்சி. கலியாணசுந்தரம்
தா. ஆவுடையப்பன்
எஸ். வி. பாண்டியன்
பி. மதியழகன்
கே. எஸ். சிவாஜி
கே. வி. சாமி
வா. மலையரசன்
ச. தங்கையா
எம். செல்லப்பெருமாள்
எஸ். அப்பனசாமி
பி. ராமானுஜம்
ஏ. கோவிந்தசாமி
எம். சின்னராசு
ஏ. சுந்தரமூர்த்தி
ஏ. பொன்னுசாமி
மு. தர்மர்
சே. பழனிச்சாமி
ச. வயிரவன்
ஆர். சத்தி
நா. குருவன்
டி. வி. பச்சையப்பன்
பி. சி. மாணிக்கம்
எம். ஏ. தமிழ்ச்செல்வம்
கே. பி. பாண்டியன்
ஆர். தாசன்
அ. பெ. அ. அருணசலம்
சோ. வெள்ளைச்சாமி
பி. தனுஷ்கோடி
கே. பி. அழகர்சாமி
பி. கே. சேதுராமன்

அண்ணதுரை

31—1—51	திருவத்திபுரம்
1—2—51	திருப்பத்தூர்
4—2—51	வந்தவாசி
10—2—51	கோலார்
18—2—51	திருவாரூர்
19—2—51	சிதம்பரம்
25—2—51	திருச்செங்கோடு
26—2—51	காங்கேயம்
27—2—51	கணியூர்

முக்கிய அறிவிப்பு

சி. என். ஏ. அவர்களின் பேச்சுகளையும், எழுத்துக்களையும், அனுமதியின்றியே பலர் வெளியிட்டுத் தொல்லை கொடுத்து வருகிறார்கள், இம்மாதிரி நடந்துகொள்பவர்களை எச்சரித்தும் இன்னும் சிலர் அதே போக்கில் நடந்துகொள்வதைக்காண பெரிதும் வருந்துகிறோம்.

சென்னையில் ஒரு தோழர், முன்னர் 'திராவிடநாட்டில்' வந்த ஒரு பகுதியை 'சந்தேக விளக்கம்' என்ற தலைப்பில் அச்சிடுவதாகக்கேட்டிருந்தார். வெளியிடக்கூடாது என்று மறுத்துவிட்டோம்.

இனி எவரும் இம்மாதிரி நடந்து கொள்ளவேண்டாம் என்று வேண்டிக்கொள்கிறோம்.

நிர்வாகி.

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

இது ராஜீய வாதிகளின் ஜால வித்தை.

ரேஷன் விஷயமாக இந்திய சர்க்கார் ஒரே சீராக நடந்து கொள்ளவில்லை.

போதிய உணவுப் பொருள்களை 'ரிசர்வ்' செய்யவில்லை.

வெளிநாட்டு உணவுப் பொருள் இறக்குமதியைக் குறைத்தது தவறு.

சுயதேவை பூர்த்தி என்பதும், வெளிநாட்டு நாணய வசதி என்பதும் அபத்தமானவை.

நிலைமையைக் கவனிக்கவில்லை சர்க்கார்.

இப்படி அடுக்கடுக்கான குற்றச் சாட்டுகளைச் சாட்டுகிறார் சர்க்கார் மீது-பேராசிரியர், பொருளியல் துறையில் வல்லுநர்!

சர்க்கார் தவறு என்கிறார், உணவு நெருக்கடிக்குக் காரணம்! அது முக்காலும் உண்மை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டுமான ஆளத்தெரியாதவர்கள் கையில் ஆட்சி சிக்கியதால் இந்த அலங்கோலம் என்று திடமாகச் சொல்லலாம்!

ஆளத் தெரியாதவர்கள் என்று அவர் கூறுது கூறுகிறார் ஆளத் தெரிந்தவர்கள் செய்ய வேண்டியவை எவையெவை யென்றுகாட்டி, அவைகளை, இன்றைய ஆட்சியாளர் செய்யவில்லை யென்கிறார்.

இன்றைய உணவு நெருக்கடி திடீரென்று ஒரு நாளில் ஏற்பட்டதல்ல அஸ்ஸாம் பூகம்பம்போன்றஇயற்கை விபரீதங்கள் ஏற்படுவதற்கு முன்பே பஞ்சம் வரும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன—சர்க்கார் கவனித்திருக்கவேண்டும்-செய்யவில்லை. நிலைமையைப் பரிசீலனை செய்து; இறக்குமதிகளை அதிகப்படுத்தி, 'ஸ்டாக்கை' விரிவாக்கியிருக்கவேண்டும். செய்யவில்லை உபரி மாகாணங்களில் கிடைப்பது, பற்றுக்குறை மாகாணங்களின் தேவை முழுவதையும் ஒருநாளும் திருப்திப்படுத்த முடியாது. அதனை உணர்ந்து காரியமாற்றியிருக்கவேண்டும். செய்யவில்லை. ஆடம்பரங்களுக்கான பொருள்கள் இறக்கவும், கட்டிடத்திற்கு பளிங்கு கற்கள் இறக்கவும் வசதியுள்ள-மனங்கொண்டுள்ள சர்க்கார் உணவுப் பொருளைப்பற்றிய வரையில கையாண்ட முறை தவறு. திருத்திக்கொண்டிருக்க வேண்டும். செய்யவில்லை.

செய்யவில்லை, ஏன்? தெரியாததால்—ஆளும் முறை அறியாததால்!

அறுக்கத் தெரியாதவன் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்கள் என்று கிராமப் பகுதியிலே சொல்வதுண்டு—ஆளத் தெரியாதவர்களிடம் ஆட்சி, அரசு, நீதி, நிர்வாகம், பணம் ......எல்லாம்!

ஆடலழகி கூடத்தின்மீது குறை சொன்னள்—காங்கிரசாட்சி, இயற்கையின்மீது பழி சுமத்துகிறது.

கூடியிருந்தவர்கள் ஒருவருக்குமே தெரியாத உண்மையைக் கண்டு பிடித்தவள்போல, கூடம் கோணல் என்றாள். அவள் ஒருவளுக்கு மட்டுமே தெரிந்து விட்டதைப்போல —அதாவது தனக்கு ஆடத் தெரியாது என்று ஒப்ப மனமில்லாமல் ஒரு 'நொண்டி' சமாதானம் தேடினள். காங்கிரசாட்சியாளரும் அப்படியேதான் 'கண் துடைப்பு' காரணம் தேடுகின்றனர்.

அவள் ஆடத் தெரியாதவள்—இவர்கள் ஆளத் தெரியாதவர்கள்!!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram'